RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2443

# தீட்டு குறுநாவலில் பெண்ணியப் பார்வை

ச. தவமணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist perspective in the Theettu novel

S. Thavamani [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, Tamil Nadu, India

* Corresponding Author: thavamanik@gmail.com

Received: 20-02-2024
Revised: 23-07-2024
Accepted: 02-08-2024
Published: 15-08-2024

Check for updates

## ABSTRACT

In the short novel “Theettu", Dalit women live in urban slums. The oppression and oppression of Dalit women is carried out in various forms. Women are subjected to sexual harassment due to patriarchy and police brutality. In this article, we will see their emotions, how they have been forced to live due to sexual harassment and what kind of difficulties they face in the grip of patriarchy.

**Keywords:** Theettu, Harassment, Dalit Women, Urban Slums

## முன்னுரை

“தீட்டு” குறுநாவலில் தலித்பெண்கள் நகர்ப்புறச் சேரியில் வாழ்கின்றனர். தலித் பெண்கள் மீதான அடக்குமுறையும், ஒடுக்குமுறையும் பலவாறான நிலையில் நிகழ்த்தப்படுகிறது. ஆணாதிக்கத்தினாலும் காவல்துறை அராஜகத்தாலும் பெண்கள் பாலியல் துன்பங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அவர்களின் மன உணர்வுகளையும் பாலியல் கொடுமைகளினால் அவர்கள் வாழ்வியல் எத்தகைய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதையும் அதனால் அவர்கள் எத்தகைய துன்பங்களை எல்லாம் ஆணாதிக்க பிடியில் சிக்குண்டு எதிர்கொள்கிறார்கள் என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.

## தலித்தியம்

அண்மைக்காலத்தில் சமூக, பண்பாட்டுத் தளத்தில் தோன்றியுள்ள “தலித்” எழுச்சி கவனிக்கத்தக்க ஒன்றாக உள்ளது. பரவலாகவும், சற்று ஆழமாகவும் இது தன்னை வெளிப்படுத்தி வருகிறது. “தலித்” என்ற சொல் மராட்டிய சொல். அதாவது ஒடுக்கப்பட்ட மக்கள் என்பது இதன் பொருள். “தலித்” என்ற சொல் குறிப்பிட்ட சில தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பதாகக் கொண்டு இன்று பலரும் இச்சொல்லைச் சமூக விழிப்புணர்வு பற்றிய சூழலுக்குப் பயன்படுத்துகின்றனர்.

## தலித் பெண்ணியம்

உயர்சாதிவர்க்கத்தினராலும் ஆணாதிக்க சமூகத்தினராலும் அதிகார வர்க்கத்தினராலும் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர்களாக அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும்

உட்படுத்தப்பட்டு பல இன்னல்களை சந்திக்கும் பெண்கள் பலருள் தலித் பெண்கள்தான் மிகஅதிகம். இன்றளவும் பல்வேறு அடக்குமுறைக்கும் பாலியல் வன்கொடுமைக்கும் தலித் பெண்கள் பலியாகி வருகின்றனர். இத்தகைய அடிமைத் தளைகளிருந்து அவர்களை மீட்டு தன் உணர்வுடன் வாழ வைப்பதே தலித் பெண்ணியம் ஆகும்.

## தீட்டு குறுநாவலில் பெண்களின் நிலை

தீட்டு நாவலில் குறிப்பிடப்படும் கிராமத்துப் பெண்ணான காமாட்சி ரிக்சாகாரனான கோவிந்தனை மணம் செய்து கொண்டு சூரியகுளம் என்கிற நகர்புறச்சேரியில் வாழ்கிறாள். கோவிந்தன் விபத்தில் இறந்த பின்பு பல்வேறு வகையில் பாலியல் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு துன்பப்படுபவளாக இருக்கிறாள். பாலியல் தொழிலுக்கு அடிமையாக்கப்பட்டு சீரழிந்து இறுதியில் பைத்தியம் பிடித்தவளாக வாழ்வின் ஒட்டுமொத்த அவலநிலையைச் சந்தித்தவளாக நாவல் வழி அறியப்படுகிறாள்.

## பாலியல் துன்பங்கள்

தலித் பெண்கள் உயர்சாதி ஆண்களாலும், தங்கள் சாதி ஆண்களாலும் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு பலவாறு துன்புறுத்தப்படுகின்றனர். தீட்டு குறுநாவலில் தலித் பெண்ணான காமாட்சி என்பவள் தாமு என்கிற ஆணின் பணத்திமிராலும் போக்கிரித்தனத்தாலும் பாலியல் துன்பத்திற்கு ஆளாக்கப்படுகிறாள்.

“அய்யோ! வானாங்கா!” காலில் விழுந்தாள். சத்தம் போடலாம். மானம் போகுமே. இங்கே யார் இருக்கிறார்கள் தாமு சேரிக்கே தலைவன். போலிஸ் அரசியல் என்று சகல மாவட்டங்களிலும் செல்வாக்கு உண்டு. குப்பு கூட மாசமாசம் அவனுக்கு மாமுல் கட்டுவதாய் சொல்லி கேட்டிருக்கிறாள். அவன் நினைத்தால் ஆளையே தீர்த்துவிடுவான்”1

”நீங்க எனக்கு அண்ணன் மாதிரிங்க

அசிங்கமாய் சிரித்தான்”2

“அண்ணான்றவளத்தான் அன்னிக்கே பயப்படாதே நம்மால படுக்க-வெல்லாம் முடியாது. ஒரு தவாசண்டையிலே அடிவவுத்துல கீசிட்டாங்க. டாக்டரு பாலானதல்லாங் வானான்னுடாரு அதனால… காமாட்சியின் தலைமுடியை கொத்தாய்ப் பற்றி இழுத்து அவள் முகத்தை தன் தொடைகளை நோக்கி அழுத்தினான்”3

தாமு என்ற ஆணாதிக்க திமிர்பிடித்தவனால் மிகவும் கீழ்த்தரமான நிலைக்கு காமாட்சி என்கிற பெண் ஆளாக்கப்படுவதிலிருந்து பெண்களுக்கு ஏற்படக்கூடிய பாலியல் கொடுமைகளை இந்நாவல் வழி அறியமுடிகிறது.

“இந்தா புள்ள உன்புருஷன் வந்தா என்ன செஞ்சுருவான், மாடன் பயலைத் தெரியாதாக்கும் பத்தினி வேசம் போடுறியே, அட சரிதாம்புள்ள வாய மூடிகிட்டுச் சும்மா இரு. மாடறுக்கப் போனவ வாறதுக்குள்ள”4 இவ்வாறாக கணவன் உயிரோடு இருந்தபோதிலும் கூட தலித் பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு ஆளாக்கப்படுகின்றனர் என்பதை நாவல் வாயிலாக அறிய முடிகிறது. சமூகத்தில் தலித் பெண்கள் மீதான பாலியல் துன்பங்கள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை இந்நாவல் சான்றாக இருந்து விளக்குகிறது.

## வாழ்வியல் அவலங்கள்

நகர்புறச் சேரிப்பெண்களின் ஒட்டுமொத்த வாழ்வியலும் அவர்கள் போதைக்கு அடிமைப்படுத்தப்பட்டு பாலியல் தொழிலுக்கு உட்படுத்தப்படுவதாக உள்ளது என்பதை தீட்டு

குறுநாவல் படம்பிடித்துக் காட்டுகிறது. தீட்டு குறுநாவலில் குறிப்பிடப்பட்டுள்ள காமாட்சி என்பவள் ஆண்களின் புணர்ச்சிக்குரிய கருவியாக மட்டுமே இருக்கிறாள். ஆணாதிக்கத்தாலும் அதிகாரத்தாலும் பாலியல் அவலநிலைக்கு தள்ளப்பட்டுவிட்டதை இந்நாவல் வழி அறிய முடிகிறது.

"மாரியப்பன் திரும்பவும் நாலுபேரைக் கூட்டி வந்தான். எல்லாரும் போன பிறகு திரும்பவும் முடுக்கினான் மாரியப்பனை. அவன் முணங்கிக் கொண்டே போனான். நன்றாய் இருட்டிவிட்டது பஸ் நிலையமும் கோமதி மாளிகையும் விளக்கு வெளிச்சத்தில் மூழ்கிக் கிடந்தன சுறுசுறுப்பாய் இருந்தது ஊர். ரொம்ப நேரம் கழித்து மீண்டும் ஐந்து பேருடன் வந்தான் மாரியப்பன அதற்கு நடுவில் பள்ளத்தில் இறங்கிப் பார்த்தான். காமாட்சி அப்படியே கிடந்தாள். சட்டை ஊக்கெல்லாம் பிய்ந்து போய் மார்பு தெரிந்து இருட்டிலே அவளை அலங்கோலமாகப் பார்க்கப் பாவமாய் இருந்தது முனியாண்டிக்கு தானும் போக வேண்டும் போலிருந்தது" காமாட்சி என்கிற பெண் ஆண் என்கிற அகங்காரம் கொண்ட விஷக்கிருமிகளால் மிகவும் மோசமான பாலியல் வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டதையும் பலவாறான வாழ்வியல் அவலநிலைக்கு தள்ளப்பட்டுவிட்டதையும் காண முடிகிறது.

## பெண்களின் உணர்வுகள்

"தீட்டு" குறுநாவலில் சேரிப் பெண்கள் பாலியல் தொழிலுக்கு உட்படுத்தப்-படுகின்றனர். அதனால் அவர்கள் பல்வேறு வகையான நோய்களுக்கும் ஆளாகிறார்கள். ஏன் பெண்ணாய் பிறந்தோம் என்கிற உணர்வு நிலை ஏற்படும் அளவிற்கு அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாத ஒன்றாக அமைகிறது.

"பொண்ணா பொறக்கறதே பாவம் அக்கா.

ஆண்டவன் இருக்கானே, பொல்லாத கன்னிங்

ஃபெல்லோ! உன்ன நெனச்சா பாவமா இருக்கு

பேசாம நீ கிராமத்திலேயே இருந்து கூலி வேலை

செஞ்சி பொழச்சுக்கக கூடாதா? இங்க ஏன்

வந்த? தலையெழுத்து"6

என்பதிலிருந்து பெண்களின் மன உணர்வினையும் அவர்களின் மன வேதனையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். 'ஒவ்வோர் முறையும் மரக்கட்டையாக முகம் தெரியாத ஆண்களுடன் படுத்து எழும்போதெல்லாம் அவள் உணர்வுகள் சொல்ல முடியாதவை. ஊமையாய் மனசு அழும். அருவருப்பாய் இருக்கும். அவன்களின் சகிக்க முடியாத நாற்றம், சிலரின் வெறித்தனம், சிலரின் அசிங்கமான ஆசைகள் இந்த உடம்பை ஏன் படைத்தான் ஆண்டவன்? அதில் உணர்ச்சி ஏன் இருக்கிறது. இதுவரை அவளை ஒருவன் கூட உயிராக எண்ணியது இல்லையே. பயன்படும் பொருள், பொழுதுபோக்கு சாதனம். இவன்களுக்கும் மனைவி குடும்பம் என்று இருக்குந்தானே? ஏன் இங்கு வருகிறார்கள்? வந்தாலும் இவன்கள் ஆண்கள். நாங்கள் போனால் மட்டும் தேவடியாள்"7 இவ்வாறாக காமாட்சியின் மன உணர்வுகள் அங்கிருக்கும் சேரிப்பெண்கள் அனைவருக்குமான ஒட்டுமொத்த கருத்தாக அமைந்துள்ளதைப் பெண்களின் உணர்வுகளாக ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

## அரசு அதிகாரியின் அராஜகம்

அரசு அதிகாரிகளின் அதிகாரம் என்பது அனைத்து துறைகளிலும் ஏதாவது ஒரு வகையில் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளது. தீட்டு குறுநாவலில் காவல்துறையில் உள்ள காவல் அதிகாரி,

தனது அதிகாரத்தை பெண்ணின் மீதான அடக்குமுறையாகவும் பாலியல் இச்சைக்காகவும் தவறான வழியில் பயன்படுத்தியுள்ளதை நாவல் வழி அறிய முடிகிறது.

“காமாட்சியின் இரண்டு கைகளையும் பின்னால் இழுத்துப் பிடித்துக் கொண்டான் ஒரு போலீஸ்காரன். இன்ஸ்பெக்டர் அவள் வாயில் கஞ்சா நிரம்பிய ஒரு சிகரெட்டை வைத்து கொளுத்தினான் காமாட்சி திமிறினாள். முடியை பற்றி கீழ்நோக்கி இழுத்தான். ஆழமாய் ஒரு இழுப்பு திக்குமுக்காடிப் போனாள். கிறுகிறுவென்று தலை சுற்றியது முதுகில் மேலும் ஒரு குத்து விழுந்தது. மேலும் ஒரு இழுப்பு இழுக்கச் சொன்னான். மயங்கி விட்டாள் காமாட்சி. இன்ஸ்பெக்டர் எழுந்து நின்று சட்டையை கழற்றிப்போட்டான்”[8] இவ்வாறாக காவல்துறையின் அராஜகமும் பதவி அதிகாரத்தை வைத்துக் கொண்டு பெண்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கி இருப்பதையும் காண முடிகிறது.

“பெண்ணைப் போகப்பொருளாகவும் இன்ப நுகர்ச்சிக்கு மட்டுமே உரியவளாக ஆண் மதிப்பிடுவதும் நடத்துவதும் நாம் காணும் நிலை. இந்த நிலையில் அவளை இரண்டாந்தர பிரஜையாக மட்டுமே நடத்துவதும் ஆணின் ஆதிக்கத்திற்குட்படுவதும் அவளுக்குரிய சமூக நிலைப்பாடுகளாகின்றன”[9] மேற்கூறியவாறு சமூகத்தில் பெண் போகப்பொருளாகவும் ஆணின் ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைக்கும் உட்படுபவளாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

## முடிவுரை

தலித் பெண்கள் மீதான அடக்குமுறையும் அவர்கள் மீது செலுத்தப்படும் ஆணாதிக்க வெறியும் இன்றளவும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது. அவ்வகையில் தீட்டு குறுநாவலில், தலித் பெண்கள் மீதான அடக்குமுறைகள், பாலியல் வன்கொடுமைகள் அதனால் ஏற்படும் துன்பங்கள் போன்றதான வாழ்வியல் அவலங்களையும் பெண்களின் மனவுணர்வுகளையும் அதிகாரவர்க்கத்தினரால் அவர்கள் படும் பாடுகளையும் பெண்ணியப் பார்வையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பெண் இனமே தன் ஆளுகைக்குள் என்ற ஆதிக்கவர்க்கத்தில் தலித் பெண்கள் என்று வரும் போது வேலியே இருந்தாலும் மேயும் அவலநிலையில் இருப்பதை “தீட்டு” நாவல் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

## References

அழகியபெரியவன், சி. (2013) அழகிய பெரியவன் கதைகள், நற்றிணை பதிப்பகம், சென்னை.

காவ்யா சண்முகசுந்தரம், (2007) நூற்பெயர் பெண்ணியமும் பிரதிகளும், காவ்யா வெளியீடு, சென்னை.

பூமணி, (2014) பிறகு, நற்றிணை பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License